# பெரியாழ்வார் திருமொழி 3-4

## தழைகளும்

(காலிப் பின்னே வரும் கண்ணனைக் கண்டு இடைக்கன்னியர் காமுறுதல்)

254 * தழைகளும் தொங்கலும் ததும்பி எங்கும் *
தண்ணுமை எக்கம் மத்தளி தாழ் பீலி *
குழல்களும் கீதமுமாகி எங்கும் *
கோவிந்தன் வருகின்ற கூட்டம் கண்டு **
மழை கொலோ வருகின்றதென்று சொல்லி *
மங்கைமார் சாலக வாசல் பற்றி *
நுழைவனர் நிற்பனராகி எங்கும் *
உள்ளம் விட்டு ஊண் மறந்தொழிந்தனரே (1)

255 வல்லி நுண் இதழன்ன ஆடை கொண்டு *
வசையறத் திருவரை விரித்துடுத்து *
பல்லி நுண் பற்றாக உடைவாள் சாத்திப் *
பணைக்கச்சுந்திப் பல தழை நடுவே **
முல்லை நல் நறுமலர் வேங்கை மலர்
அணிந்து * பல்லாயர் குழாம் நடுவே *
எல்லியம் போதாகப் பிள்ளை வரும் *
எதிர் நின்று அங்கினவளை இழவேன்மினே (2)

256 சுரிகையும் தெறிவில்லும் செண்டுகோலும் *
மேலாடையும் தோழன்மார் கொண்டோட *
ஒரு கையால் ஒருவன் தன் தோளை ஊன்றி *
ஆனிரை இனம் மீளக் குறித்த சங்கம் **
வருகையில் வாடிய பிள்ளை கண்ணன் *
மஞ்சளும் மேனியும் வடிவும் கண்டாள் *
அருகே நின்றாள் என் பெண் நோக்கிக் கண்டாள் *
அது கண்டு இவ்வூர் ஒன்று புணர்க்கின்றதே (3)

257 குன்றெடுத்து ஆனிரை காத்த பிரான் *
கோவலனாய்க் குழலூதி ஊதி *
கன்றுகள் மேய்த்துத் தன் தோழரோடு *
கலந்துடன் வருவானைத் தெருவில் கண்டு **
என்றும் இவனை ஒப்பாரை நங்காய் *
கண்டறியேன் ஏடி வந்து காணாய் *
ஒன்றும் நில்லா வளை கழன்று *
துகிலேந்திளமுலையும் என் வசம் அல்லவே (4)

258 சுற்றி நின்று ஆயர் தழைகளிடச் *
சுருள் பங்கி நேத்திரத்தால் அணிந்து *
பற்றி நின்று ஆயர் கடைத்தலையே *
பாடவும் ஆடக்கண்டேன் ** அன்றிப் பின்
மற்றொருவர்க்கு என்னைப் பேசல் ஒட்டேன் *
மாலிருஞ்சோலை எம் மாயற்கல்லால் *
கொற்றவனுக்கு இவளாமென்றெண்ணிக் *
கொடுமின்கள் கொடீராகில் கோழம்பமே (5)

259 சிந்துரம் இலங்கத் தன் திருநெற்றி மேல் *
திருத்திய கோறம்பும் திருக்குழலும் *
அந்தரமுழவத் தண் தழைக்காவின் கீழ் *
வருமாயரோடு உடன்வளை கோல் வீச **
அந்தமொன்றில்லாத ஆயப் பிள்ளை *
அறிந்தறிந்து இவ்வீதி போதுமாகில் *
பந்து கொண்டானென்று வளைத்து வைத்துப் *
பவளவாய் முறுவலும் காண்போம் தோழீ (6)

260 சாலப்பல் நிரைப் பின்னே தழைக்காவின் கீழ் *
தன் திருமேனி நின்றொளி திகழ *
நீல நல் நறுங்குஞ்சி நேத்திரத்தால் அணிந்து *
பல்லாயர் குழாம் நடுவே **
கோலச் செந்தாமரைக் கண் மிளிரக் *
குழலூதி இசை பாடிக் குனித்து * ஆயரோடு
ஆலித்து வருகின்ற ஆயப் பிள்ளை *
அழகு கண்டு என் மகள் அயர்க்கின்றதே (7)

261 சிந்துரப் பொடிக் கொண்டு சென்னி அப்பித் *
திருநாமமிட்டு அங்கோரிலையன் தன்னால் *
அந்தரமின்றித் தன்னெறி பங்கியை *
அழகிய நேத்திரத்தால் அணிந்து **
இந்திரன் போல் வரு மாயப் பிள்ளை *
எதிர் நின்றங்கினவளை இழவேல் என்ன *
சந்தியில் நின்று கண்டீர் * நங்கை தன்
துகிலொடு சரிவளை கழல்கின்றதே (8)

262 வலங்காதின் மேல் தோன்றிப் பூவணிந்து *
மல்லிகை வனமாலை மௌவல் மாலை *
சிலிங்காரத்தால் குழல் தாழ விட்டுத் *

தீங்குழல்வாய் மடுத்தூதி ஊதி **
அலங்காரத்தால் வரு மாயப் பிள்ளை *
அழகு கண்டு என் மகள் ஆசைப்பட்டு *
விலங்கி நில்லாது எதிர் நின்று கண்டீர் *
வெள்வளை கழன்று மெய்ம்மெலிகின்றதே (9)

263 * விண்ணின் மீது அமரர்கள் விரும்பித் தொழ *
மிறைத்து ஆயர்பாடியில் வீதியூடே *
கண்ணன் காலிப் பின்னே எழுந்தருளக் கண்டு *
இளவாய்க் கன்னிமார் காமுற்ற
வண்ணம் ** வண்டமர் பொழில் புதுவையர் கோன் *
விட்டுசித்தன் சொன்ன மாலை பத்தும் *
பண் இன்பம் வரப்பாடும் பத்தருள்ளார் *
பரமான வைகுந்தம் நண்ணுவரே (10)